1973 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சாப்பாட்டிற்குப் பிறகு மட்டும் அதை உபயோகப்படுத்துவதில்லை. மற்றவர்களை வரவேற்பதற்குக் கூட, வெற்றிலைபாக்கு வைத்துத்தான் வரவேற்கிறோம். முன்னாலும் உபயோகப்படுத்தப்படுகிறது, பின்னாலும் உபயோகிக்கப்படுகிறது. அதற்கென்று தனிச் சலுகை கொடுக்க வேண்டியதில்லை.

திரு. கே. என். குமாரசாமி: வெற்றிலையோடு அகத்திக் கீரையும் பயிராகிறது என்பதை எல்லோரும் மறந்துவிட்டார்கள். ஆகவே, அகத்திக் கீரையையும் கவனிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: கொடிக்கால் என்றாலே, இதுவும் பயிராகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். இதைப்பற்றி அது வளர்கிறது, அதைப்பற்றி இது வளர்கிறது.

கிராமப்புறங்களில் துணி தயாரிப்பு.

*638 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் போர்டின் சார்பாகக் கிராமப் புறங்களில் துணி தயாரிக்கும் நிலையங்கள் ஏற்படுத்த திட்டமிடப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கு ஏற்படுத்தப்படும் ?

(உ) அவற்றின் மூலதனம் யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) பெருமாநல்லூர்—கோவை மாவட்டம்.

சூலூர்—கோவை மாவட்டம்.

எடையன்வலசு—மதுரை மாவட்டம்.

மயிலாடி—கன்னியாகுமரி மாவட்டம்.

ஏரல் அல்லது வள்ளியூர்—திருநெல்வேலி மாவட்டம்.

மேற்படி ஐந்து இடங்களில் துவங்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இவற்றில் பெருமாநல்லூர் நிலையம் 25—4—1971-லும்,

சூலூர் நிலையம் 13—6—1972-லும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிற நிலையங்கள் விரைவில் துவங்க இருக்கின்றன.

(உ) இயந்திரங்கள்	..	ரூ. 1–82 லட்சம்
கட்டிடம்	..	ரூ. 1–50 லட்சம்
மூலதனம்	..	ரூ. 0–60 லட்சம்
	மொத்தம்	ரூ. 3–92 லட்சம்

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கதர்த் துணி உற்பத்தியைப்பற்றி எந்த எந்த இடங்களில் அது துவங்கப்பட இருக்கிறது அல்லது துவக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விளக்கங்களை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் நகரில், மிகக் குறிப்பாக, கோரைநாட்டில் மிகச் சிறந்த துணி உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. அந்தப் பகுதியில் இந்தத் தொழில் இப்பொழுது நசித்து வருகிற காரணத்தால், அங்கே இம்மாதிரியான நிலையத்தை அமைக்க அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஒவ்வொரு கூட்டுமன்றத்திலும் இதை ஆரம்பிப்பது என்ற திட்டம் இருக்கிறது. ஆகவே, முதலாவதாக, ஐந்து இடங்களிலே இதை ஆரம்பிக்க இருக்கிறோம். மேலும் பல இடங்களில் ஆரம்பிப்பதற்கான யோசனைகள் நடைபெற்று வருகின்றன. அப்படி ஆலோசனைக்கு வரும்போது, மாயூரம் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, தமிழ்நாடு கதர் போர்டின் சார்பிலே துணிகள் தயாரிக்கிற சில இடங்களைக் குறிப்பிட்டு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டம், வறட்சியாலே பாதிக்கப்பட்டிருக்கிற மாவட்டம், வேலையில்லாத் திண்டாட்டத்தினாலே பாதிக்கப்பட்டிருக்கிற மாவட்டம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, அந்த மாவட்டத்திலே துணி தயாரிக்க, கிராமமக்கள் அதைப் பயன்படுத்த இந்த நிலையங்களை அமைக்க அரசு எற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன், ஒவ்வொரு கூட்டுமன்றத்திலும் ஒவ்வொரு ஆலை ஆரம்பிக்கின்ற திட்டம் இருக்கிறது

1973 ஏப்ரல் 5]

என்று. முதலாவதாக, இந்தப் பகுதிகளிலே ஆரம்பித்திருக்கிறோம். மேலும் அவ்வப்போது ஏற்படுகிற நிலைமைக்குத் தகுந்தவாறு அவை ஆரம்பிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவிலே ஒரு நிலையமானது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் இருக்கிறதா? அது லாபகரமாக ஓடுகிறதா? நட்டமாக ஓடுகிறதா? அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அது இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. இவை எல்லாம் அநேகமாக லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, பெருமாநல்லூர் போன்ற இடங்களில் இது மாதிரியாகத் துணிகளைத் தயார் செய்கிற நிலையங்கள் துவங்கப்பட்டிருப்பதாகவும், அதனால் லாபம் இருப்பதாகவும் விவரங்கள் கூறுகின்றன. ஆகவே, காஞ்சிபுரத்திலே இது மாதிரி அமைத்து, துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற வகையில் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : காதி வாரியமே இப்படி எல்லோருக்கும் வேலை கொடுக்கின்ற திட்டத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. படிப்படியாக, இந்தத் திட்டத்தை எல்லா இடங்களிலும் துவக்க ரூ. 3.92 லட்சம் தேவைப்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு இடமாக ஆரம்பித்து வருகிறோம். இப்பொழுது 68 பேர் வேலை செய்து வருகிறார்கள். பஞ்சாலை நூலுக்குத் தேவையான துணி மட்டும் இப்பொழுது தயாரிக்கப்படுகிறது. போட்டிக்குப் போவது என்றால் அதற்கு அதிகமான நிதி தேவைப்படுகிறது என்ற காரணத்தாலே, அதற்கான யோசனை இப்பொழுது இல்லை.

சாத்தியாறு அணைப்பகுதியைச் சுற்றுலா மையமாக்கல்.

* 639 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் சாத்தியாறு அணைக்கட்டைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?